# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4003/SCIC/2023**

திரு சி. கமலையன் புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
மார்த்தாண்டம் ... பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 05.09.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 05.09.2022 தேதியிட்டு அனுப்பிய தனது புகார் மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்ட தேதி விவரம், கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டம் ஏழுதேசம் “C” கிராமம் புலஎண்.352/16C பழைய எண்.1446 உள்ள நிலத்தின் தங்கள் அலுவலகப் பதிவேடு மற்றும் புலப்படம்

பார்வையிடப்பட்டுள்ளதற்கான விவரம் என்பன போன்ற தகவல்களை 15 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 26.09.2023 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 25.10.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் CP 4003/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனு குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 14.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் செல்வி டி. பூவரசி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 26.09.2023 மற்றும் 14.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களையும் விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 06.12.2023 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் தனக்கு கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்தார். அவர் தனது முக்கிய வாதுரையாக இந்நிகழ்வில் ஆவணப்பதிவின் போது தவறான சர்வே எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளதாவும், மேலும் இத்தவறானது திருத்த பத்திரத்தினை வைத்து சரிசெய்யப்படாமல் பதிவுத்துறை அலுவலர்களால் மோசடியாக ஆவணப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் தனது நிலத்திற்கு சென்று வருவதற்கான நடைபாதை வழியானது தனக்கு சொந்தமானது என்றும், ஆனால் அப்பாதையானது தவறாக வேறொரு நபருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார். இது கோரிக்கை வடிவில் உள்ளது என்பதை ஆணையம் பதிவு செய்கிறது.

6. மேலும் மேற்படி நிகழ்வு குறித்து, மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய புகார் மனுவானது தவறாக மறுக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தெரிவித்தார். வழங்கப்பட்ட தகவல்கள் மனுதாரருக்கு திருப்தியளிக்காத பட்சத்தில், மனுதாரர் தனது புகார் மனு தொடர்பாக துறையின் உயர் அதிகாரிகளுக்கு மனு செய்து உரிய நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

7. மனுதாரரின் புகார் மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் மனுதாருக் உரிய காலத்தில் பதில்கள் / தகவல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொதுத் தகவல் அலுவலரின் மீது ஆணையத்தால் நடவடிக்கை மேற்கொள்ள எந்தவித முகாந்திரமும் இல்லையென்பது மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. **இத்துடன் இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4003/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
மார்த்தாண்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு சி. கமலையன்,
த/பெ சின்னக்குட்டி,
2/57, ஜோதி இல்லம், புதுக்கிராமம்,
தெற்கு கடையம் கிராமம்,
கடையம் 627 415
தென்காசி மாவட்டம்.

Copy to: File TK/PS